Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா. 5-00

நல்லூர் இனை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 0 (15 - 04 - 1992) புதன்கிழமை ஓசை: 57

## பயிற்சி பெற்ற 106 பேருக்கு நியமனம் கிடைக்கவில்லை

''சீடா'' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 106 பட்டதாரிகளுக்கு இதுவரை வேலை எதுவும் வழங்கப்படவில்லை என வட - கிழக்கு மாகாண பட்டதாரி பயிலுநர் சங்கங்களின் சம்மேளன பேச்சாளர் தெரிவித்துள்ளார் 1990 மார்ச் முதலாம் திகதி தொடக்கம் இரண்டு ஆண்டுகள் பதவி நிலை உத்தியோகத்தர் பதவிகளுக்கென பயிற்சி பெற்ற 180 பட்டதாரிகளுக்கு அப் பயிற்சிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென உறுதி மொழி வழங்கப்பட்டது. அத்தோடு இவ்வாண்டு ஜனவரியில் 'சீடா' கருத்தரங்குடன் கூடிய பயிற்சி நெறியில் இந்தப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது. இந்த கருத்தரங்கில் 'சீடா' இயக்குநர்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பாரிய படையெடுப்பிற்கு சிங்கள ஆயுத படைகள் முஸ்தீபு

## அன்னை பூபதி நினைவாக உண்ணா விரதம்

(புங்குடுதீவு)

தியாக அன்னை பூபதி அவர்களின் நினைவாக 12-4-92 ஞாயிற்றுக்கிழமை, இடம் பெயர்ந்து யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருக்கும் தீவக மக்கள் அடையாள உண்ணா விரதம் அனுஷ்டித்தனர். காலை முதல் நடைபெற்ற இவ் உண்ணாவிரதத்தின் முடிவில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. தீவக (4 ஆம் பக்கம் பார்க்க)

## எஞ்சிய வினாத்தாள்கள் 17 ஆம் திகதி யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர விசேட பரீட்சை எஞ்சிய வினாத்தாள்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேரும் என தெரிய வருகிறது.

கடந்த முதலாம்திகதியாழ் மாவட்டத்தில் ஆரம்பமான மேற்படி பரீட்சைக்கு பத்து நாட்களுக்கான வினாத்தாள்களே முன்னர் எடுத்து வரப்பட்டன.

மற்றைய தொகுதி வினாத்தாள்கள் விமானம் மூலம் கொழும்பிலிருந்து பலாலிக்கு எடுத்துவரப்பட்டு 17 ஆம் திகதி தரைமார்க்கமாக இங்கு எடுத்து வரப்படும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ச)

## காணாமற் போனோருக்கு நஷ்ட ஈடு வழங்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமல் போனோருக்கு நஷ்ட ஈடு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் ஒரு வருடத்திற்கு மேல் காணாமல் போனோர் என உறுதிப்படுத்தப்படுபவர்களுக்கே இந்த நஷ்டஈடுவழங்கப்படவுள்ளது.

இவ்வாறு காணாமல் போனோருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான சட்டம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக கடந்த ஏழாம் திகதி கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் அமைச்சர்கள்கலந்துகொண்ட கபினற் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் யாழ் அரசாங்க அதிபரும் கலந்துகொண்டார் என்பதுகுறிப்பிடத்தக்கது. (ச)

## வரட்சி நிவாரணத்திற்கு

## போர்முறைத் திட்டம் தயாரிப்பதில் இராணுவ தலைமை மும்முரம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாரிப்பு வேலைகளில் ஆயுதப் படைகள் ஈடுபட்டு வருவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. கிழக்கில் புலிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இராணுவ தலைமைப்பீடம் போர் முறைத் திட்டங்களை தயாரித்து வருவதாகவும் விரைவில் தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பமாகலாமெனவும் இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கான நேரடிப் பொறுப்பை ஏற்றுள்ள முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும், முதலில் கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தை ஒழிப்பதில் தீவிர அக்கறை காட்டுகின்றனர். இவர்களின் போர் முறைத் திட்டத்தில் கிழக்கில் தாக்கும் சக்தி படைத்தவர்களையும், இராணுவத்தினருக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தக் கூடிய நிலையிலும் புலிகள் இருப்பதை சிதைத்து விடுவதே முக்கியமானதாகும்.

இதேவேளை, புதிய போர் முறைத் திட்டத்திற்கு ஏற்ப முதற் கட்ட நடவடிக்கையாக அதிகாரிகள் இடமாற்றப்பட் ஏற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. அத்தோடு இவ்வருட இறுதிக்குள் போரில் முக்கிய வெற்றிகளை ஈட்ட வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்ப் பதினால் கிழக்குத் தாக்குதல்களை விரைவு படுத்த வேண்டிய நிலையை இராணுவம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு ராணுவ நடவடிக்கை புலிகளால் முறியடிப்பு

கிழக்கு மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்காவின் இராணுவ நடவடிக்கை புலிகளின் தாக்குதலால் தொடர முடியாத நிலை அடைந்துள்ளது.

கடந்த வெள்ளியன்று கிழக்கில் புலிகளால் நடாத்தப்பட்ட இருவேறு தாக்குதல்களில் 20 படையினர் கொல்லப்பட்டதை அடுத்து புதிய (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது தடை விதிப்பு:

## கல்முனைசுற்றி வளைப்பில் 60க்கும்மேற்பட்டோர் கைது

கல்முனைப் பகுதியைத் திடீரெனச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவ அதிரடிப் படையினர் அப்பகுதியில் வசித்த பல தமிழரைக் கைது செய்துள்ளது.

கடந்த சனிக்கிழமைநடத்தப்பட்ட இச் சுற்றிவளைப்பின் போது அறுபதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## பொலிஸ் அதிகாரிகள் சிலர் பதவிவிலக ஆலோசனை

உடுகம்பொலவின் விவகாரத்திற்குப் பின்னர் பொலிஸ் உயரதிகாரிகள் சிலர் பதவி விலக தீவிரமாக ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பி. யினால் நெருக்கடி நிலவிய காலகட்டத்தில் அவர்களை வேட்டையாடி ஒழித்துக்கட்டுவதில் ஈடுபட்ட இவர்கள் தமது எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டி உள்ளதாக கருதுகிறார்கள்.

இவ் அதிகாரிகள் இப்பொழுது மனித உரிமை நிறுவனங்களுடன் சுமுக உறவை பேணவும் நட்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முயற்சி செய்து வருவதாக தெரிய வருகிறது.

## ஊறணியில் துப்பாக்கிசூடு; ஒருவர்பலி, ஐவர்காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஊறணியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவர் பலியானார்.

கடந்த சனிக்கிழமை ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் வீதியில் சென்றுகொண்டிருந்த

# வரட்சி நிவாரணத்திற்கு அரசு உதவி கோருகிறது

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க உதவி வழங்கும் நாடுகளிடம் வரட்சி நிவாரணம் கோருகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு உணவுப் பொருள்களை உதவியளிக்குமாறே இந்த உதவி அளிக்கும் நாடுகளை சிறிலங்கா கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மே மாதம் மழை பெய்யாவிட்டால் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் பட்டினியால் வாடக் கூடிய உண்மையான பஞ்ச அபாயம் ஏற்படும் என்று அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் அமைப்புக்களின் கூட்டத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

முறைத் திட்டத்திற்கு ஏற்ப முதற் கட்ட நடவடிக்கையாக அதிகாரிகள் இடமாற்றப் பட்டுள்ளார்கள். கிழக்கிற்கு இதுவரை பொறுப்பாயிருந்த மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா மாற்றப்பட்டு, தீவிர ராணுவ போக்குடைய பிரிகேடியர் விஜய விமலரெட்ணா நியமிக்கப் பட்டுள்ளார். இவரோடு, மேலும் சில தீவிர போக்குடைய அதிகாரிகளும், கிழக்கிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளை வெற்றி கொள்வதை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணா ஓர் சவாலாகவே

# புலிகள் மீது தடை விதிப்பு; மத்திய அரசு தீவிர பரிசீலனை

## -- நரசிம்மராவ்

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்வது பற்றி மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகின்றது என்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் கூறியிருக்கிறார்.

இப்பகுதியில் நேற்றுத் தொடங்கிய இந்திரா காங்கிரஸ் கட்சி கூட்டத்திற்கு செல்லும் வழியில் சென்னைவிமானநிலையத்தில் பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக மேலும் ஒரு கூட்டம் முதலமைச்சர்கள் மட்டத்தில் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் வீதியில் சென்றுகொண்டிருந்த தமிழ் மக்கள்மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார் ஐந்துபேர் படுகாயமடைந்தனர்.

இறந்தவரின் சடலம் இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்பட்டு பற்றைக்குள் வீசப்பட்டது இச் சடலம் இரண்டு நாட்களின் பின் உறவினரால் மீட்கப்பட்டது.

இறந்தவரின் அடையாள அட்டையை எடுத்துச் சென்ற இராணுவம் அவரை ''பயங்கரவாதி'' என அறிவித்துள்ளது.

# யாழ். வைத்தியசாலையில் நடமாடும் நூலக சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் நடமாடும் நூலக சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் பல மாதங்களாகத் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்காகவே இச் சேவை இலங்கையில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்படவுள்ளது

யாழ் நோயாளர்நலன்புரிச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள இச்சேவைக்கு தேவையான பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் இலவசமாக வழங்க பத்திரிகை நிறுவனங்களும் புத்தக நிலையங்களும் பல நலன் விரும்பிகளும் முன்வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

## அம்பாறை குண்டுவெடிப்பு;

# பயன்படுத்தப்பட்ட மினிபஸ் சளுவாஞ்சிக்குடி வர்த்தகருடையது?

(அம்பாறை)

கடந்த வெள்ளிக்கிழமை அம்பாறை பஸ் நிலைய குண்டு வெடிப்புக்குக் காரணமானது என நம்பப்படும் மினிபஸ் களுவாஞ்சிக்குடி வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மினிபஸ்- கல்முனை- அம்பாறைக்கான போக்குவரத்துச் சேவையில் விபத்து நடப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர்தான் ஈடுபடுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இல. தமிழர் கல்வியை மறுப்பது மனித நேயமற்ற செயல்

(சென்னை)

இந்திய அரசு திபெத்திய அகதிகளுக்கும், வங்காள அகதிகளுக்கும், பாலஸ்தீனிய அகதிகளுக்கும், ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கும்போது இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மட்டும் கல்வி உதவியை மறுப்பது மனிதநேயமற்ற செயலாகும்

இவ்வாறு தமிழக அரசுக்குப் பதின்நான்கு தமிழறிஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அறிஞர்கள் தமது கோரிக்கையை அடக்கிய அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

1983 ஆம் ஆண்டு இன வெறித் தாக்குதலுக்குள்ளாகி இலட்சக் கணக்கான தமிழர்கள் அகதிகளாகித் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தார்கள்

தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட அகதி முகாம்களிலும், வெளியிலும் இரண்டரை இலட்சம் பேர் அகதிகளாக இருக்கிறார்கள் அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கல்வியை மறுப்பது நியாயமற்ற செயலாகும். தங்கியுள்ள அகதிகளுக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டியது அரசின் கடமையாகும்.

1983 ஆம் ஆண்டுமுதல் அ.தி.மு.க அரசும், பிற அரசாங்கங்களும் தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கு வழங்கிவரும் கல்வி வாய்ப்பை அனைத்து நிலைகளிலும், அனைத்துலக கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்

கவிஞர் சுரதா (உலகத் தமிழ் கவிஞர் பேரவை), பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்), பேராசிரியர் சாலை இளந்திரையன் (அறிவியக்கப் பேரவை), சாலினி இளந்திரையன் (அறிவியக்கப் பேரவை), ப.சாத்தன் (தலைநகர் தமிழ் சங்கம்) ஆகியோர் உட்பட மொத்தம் நாற்பத்தொரு பேர் அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

# தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக இன்று

கோப்பாய் வட்டவைப் பிரிவில் இன்றுஉருப்பராய்ச்சவத் தமிழ் வித்தியாலயத்தில் தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 00 மணிவரை இடம்பெறும்.

நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 7.00 மணிக்கு ஆரம்பமாகும் இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் புதுவை அண்ணா, வாஞ்சிநாதன், இளையவன், சுடர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

தொடர்ந்து இடம் பெறும் கலை நிகழ்ச்சிகளில் சின்னமணி வில்லிசைக் குழுவினரின் வில்லிசை இடம்பெறவுள்ளது.

## அன்னைபூபதி நினைவாக

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் தியாகி அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டம் நல்லூர் ஆலய வடக்கு வீதியில் நடாத்தப்படவுள்ளது இந்த நினைவஞ்சலிக் கூட்டம் சம்மேளனத் தலைவர் திரு இ. தவகோபால் தலைமையில் இம் மாதம் 19 ஆம் திகதி ஞாற்றுக்கிழமை நடைபெறும்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு.யோகி மாலை 6.00 மணிக்கு ஏற்றிவைப்பார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வியாழன், வெள்ளி வர்த்தக நிலையங்கள் மூடப்படும்

பெரிய வெள்ளி, சித்திரை பௌர்ணமி ஆகியதினங்களை முன்னிட்டு வியாழன் வெள்ளி தினங்களில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ். வர்த்தகர் சங்கமும் வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கமும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மதுபோதையில் மருத்துவர் நோயாளிகள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் கடமையிலிருந்த மருத்துவ அதிகாரி மதுபோதையில் இருந்ததால் நோயாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளாயினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இவ் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றிய மருத்துவ அதிகாரியே இவ்வாறு மது போதையில் காணப்பட்டார்.

மாலை 6-30 மணியளவில் வைத்திய சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து மூன்றுபேர் அழைத்து வரப்பட்ட சமயம் இவ் வைத்திய அதிகாரி தனது ஓய்வு அறையில் மது போதையில் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார்.

வெளியே வந்து நோயாளியை பார்வையிட்டு சிகிச்சைக்காக அனுப்பும்படி வைத்தியசாலை சிற்றூழியர்கள் கேட்டுக் கொண்ட போதும் அவர் வர மறுத்துவிட்டதாக அறியவருகிறது.

ஊழியர்கள், செஞ்சிலுவை சங்க தொண்டர்கள், பாதுகாப்பு ஊழியர்கள் அனைவரும் இந்த அதிகாரியை வெளியே அழைக்க எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது

பின்னர் இரவு 9. -00 மணியளவில் வெளியே வந்த இவ் அதிகாரி நோயாளரைப் பார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மனிதஉரிமைமீறலை ஆராய நோர். குழுசிறிலங்கா விஜயம்

( ஒஸ்லோ )

காணாமல் போதல், கடத்திச் செல்லப்படுதல் ஆகிய மனித உரிமைகள் மீறல் நிலை குறித்து ஆழமான விசாரணை ஒன்றை மேற்கொள்ள நோர்வே அரசு உயர் மட்டக் குழு ஒன்று அடுத்த மாதம் சிறிலங்கா வரவுள்ளது என்று அந்நாட்டுக் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் திருமதி கிறேட் பார்மோ தெரிவித்தார்.

மனித உரிமைகள் விடயம் தொடர்பாக நோர்வே அக்கறை கொண்டிருப்பதோடு, அதன் முக்கியத்துவத்தை சிறிலங்காவுக்கு வலியுறுத்தவும் விரும்புகிறது. இது பற்றி சிறிலங்கா அரசு மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான அமைப்புக்களுடனும் வெளியாகப் பேசி ஆராய்வது எமது விஜயத்தின் நோக்கமாகும் என்றார் அவர்.

அண்மையில் வெளியான ஐ. நா அறிக்கையில் தெரியப்படுத்தியிருக்கும் விடயங்கள் பற்றி மேலும் நாங்கள் அறிய விரும்புகின்றோம். இது தொடர்பாக அரசின் பொறுப்பு என்ன என்பது பற்றி எமக்குத் தெரியுமென்றாலும், நாம் மேற்கொள்ள இருக்கும் எதிர்கால உதவி, அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தூதுக் குழு சிறிலங்காவில் தங்கியிருக்கும் காலத்தில் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி அறிவதோடு, இந்த அபிவிருத்தி உதவிகளால் நன்மை பெறும் நிறுவனங்களுடனும் ஆலோசனை கலக்கவுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மற்றும் வெளியுறவு அமைச்சு உயர் அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெறுவர்.

பொரிஸ் நகரை மையமாகக் கொண்டியங்கும் சிறிலங்காவுக்கு உதவும் நாடுகளில் முக்கிய பங்காளிகளில் நோர்வேயும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. 1992 ஒக்டோபரில் சிறிலங்காவுக்கு உதவும் வரவு - செலவுத்திட்டத்தில் நோர்வே பத்து விகிதத்தைக் குறைத்துக் கொண்டது.

நோர்வே மேலும் உதவிகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்று கொழும்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்காவுக்கு உதவுவதற்கான 1993 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நோர்வே வழங்கும் அபிவிருத்தி உதவியின் முன்னேற்றத்தில் நோர்வே அதிக அக்கறை காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐ.நா.மனித உரிமைகள் அறிக்கையைத் தொடர்ந்து நோர்வே குழுவின் சிறிலங்கா விஜயம் அரசுக்கெதிரான இறுதி எச்சரிக்கையாக அமையும் என்றும் சொல்லப்படுகிறது.

ஐ நாவின் வேண்டுகோளின் பேரிலேயே நோர்வே சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறலை அவதானிப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. கடந்த ஆண்டில் சிறிலங்காவுக்கு உதவியைக் குறைக்க உதவும் நாடுகளில் நோர்வே முதலிடம் வகிக்கிறது. அனைத்து நாடுகளிலும் மனித உரிமைகள் மீறப்படுவதை நோர்வே கண்டித்து வருவது வழக்கம்.

சிறிலங்காவுக்கு விஜயம் செய்யும் நோர்வே குழுவில், றோயல் நோர்வே வெளியுறவு அமைச்சுத் தூதுவர் ஹக்கன் கஜல்டி, வெளியுறவு அமைச்சு முதன்மை ஆலோசகர் நிப்ஸ் ஹூக்ஷிரிவிட், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆலோசகர் திருமதி பெரிட் பினாவ்னி ஆகியோர் இடம் பெறவுள்ளனர்.

# பிரஜா உரிமை கோரியும் சான்றிதழ் கிடைக்கவில்லை

1988 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 39 ஆம் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்த பலருக்கு இதுவரை சான்றிதழ்கள் கிடைக்கவில்லை என புகார் செய்யப்படுகின்றது.

இந்திய வம்சாவளியினரை பதிவுசெய்யும் திணைக்களம்

...கள் கடிதம் எழுதினால் அதற்கு பதில் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசு மீதான குற்றச்சாட்டை உடுகம்பொல நிரூபிப்பாரா?

-ரணில்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல நீதிமன்றத்தில் அரசாங்கம் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கட்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க அறிக்கையொன்றில் கேட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறுகையில் உடுகம்பொல அரசாங்கத்தின் மீது சேறு பூசுவதற்குப் பத்திரிகையாளர் மாநாடுகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக முடியுமெனில் நீதிமன்ற பொது விசாரணைகளை பயன்படுத்தி தமது குற்றச்சாட்டுகளை நிரூபிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உடுகம்பொலவின் அறிக்கைகளில் இருக்கக் கூடிய சகல பலவீனங்களுக்கும் மத்தியில் அவரது அறிக்கைகளின் உண்மையையும் பொய்யையும் பரீட்சித்துப் பார்க்க அரசாங்கம் தயாராக இருக்கிறது எனவே தான் இந்த விவகாரத்தை அரசாங்க அதிகாரிகளின் கைகுளியில்அரசாங்கம்விட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகளோடு ஒத்துழைக்க உடுகம்பொல தயாராக இருக்கவில்லை என்பதை அவரது செயல்கள் நிரூபிப்பதாகவும் கூறியுள்ளார்.

# தனித்துவத்தைப் பாதுகாக்க தனி மே தின கொண்டாட்டம்

# மகனை விடுவிக்கக்கோரி தாய் ஆட்கொணர்வு மனு

[கொழும்பு]

அகதி முகாமில் தங்கியிருந்த வேளையில்சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இரண்டுநாள் வேலைக்காக கொண்டு செல்லப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாமல் இருக்கும் மகனை கேட்டு தாய் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்துள்ளார்.

இராசையா சுதாகரன்என்ற வாலிபரை ஆஜராகக் கோரி கொழும்பு செட்டித் தெருவைச் சேர்ந்த திருமதி இராசையா வசந்தலட்சுமி சட்டத்தரணிஅப்பாத்துரை விநாயகமூர்த்தி ஊடாக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் ஊர்காவற்றுறை இராணுவ முகாம் கமாண்டர் வட,கிழக்கு மாகாண இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ராணுவ தளபதி ஜெனரல் சிசில் வைதியத்ரட்ன சட்டமா அதிபர் ஆகியோரைபிரதிவாதிகளாககுறிப்பிட்டுள்ளார். மனுதாரர் மனுவில்தெரிவித்திருப்பதாவது:-

24. 8. 90 முதல் மனுதாரர் தனது பிள்ளைகளான சுதாகரன் பிரபாகரன், தேன்மொழி, ஐங்கரன் ஆகியோருடன் அல்லைப்பிட்டி பிலிப்ஸ் மேரிஸ் தேவாலயத்தில் அகதியாகத் தங்கிருந்தார்.

25. 8. 90 காலை 10 மணி போல் அகதிமுகாம் வந்த ஊர்காவற்றுறைமுகாமைச்சேர்ந்த சுமார் இருநூறு இராணுவ அதிகாரிகள் சுதாகரன் அவர் சகோதரன் பிரபாகரன் மற்றும் பலரையும் கைது செய்து மண்டைதீவு கொண்டு சென்றனர்.

மறுநாள் கைதான அனைவரும் அல்லைப்பிட்டி வைரவர் கோயிலுக்கு கொண்டு வரப்பட்டனர். சுதாகரனை தவிர ஏனைய 24பேர் விடுவிக்கப்பட்டனர், விடுவிக்கப்பட்டவர்களில் சுதாகரனின்சகோதரர் பிரபாகரனும் ஒருவர்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி கனகசபைவள்ளிப்பிள்ளை

(குச்சவெளி, திருகோணமலை)

தோற்றம்: 1920 - 10- 03
மறைவு: 1992 - 03 - 16

யாரிடம் செல்வோம் - அம்மா
யாரிடம் செல்வோம்
பாசத்தின் பிணைப்பில் - எம்மை
பாகாய் உருக்கிவிட்டாய்
காலமெல்லாம் உனைநினைத்து - நாம்
கண்ணீருடன் வாழுகின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மேலும் நாம் இன்று ( 15 - 04 - 1992 ) நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கணவன், பிள்ளைகள்
C. 80 மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அரச வீடமைப்புத் திட்டம்,
நாவற்குழி.
(2460)

---


## காணவில்லை

விஜயமலர் ( மலர் )

9 - 4 - 92 வியாழக்கிழமையில் இருந்து 9 வயதுடைய,

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
27 - 11 - 1975

உதிர்வு:
27 - 4 - 1991

### வீரவேங்கை இங்சிலி

(பேரம்பலம் பாஸ்கரன்)

திதி: 15- 04 1992 (புதன்)

ஒளிமயமான உன் உருவம்
எங்கள் மனதினில் இருக்கிறது
தமிழ் ஈழம் எங்கிலும் - உந்தன்
வீரம் புகழுடன் ஒளிர்கின்றது
ஆனையிறவு போர்க்களத்தில் உயிர்நீத் வீரனே
உன் கைத் துப்பாக்கி இனி எம்கையில்
ஈழமண் மீட்டு உன் தாகம் தணிப்போம்.

27 - 4 - 1991 அன்று தமிழ் மண்ணின் விடுதலைக்காக ஆனையிறவு போர்க்களத்தில் இவருடன் வீரமரணம் அடைந்த போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வீட்டுத்திட்டம்,
இரணைமடு,
கிளிநொச்சி.

அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார் தம்பி அத்தான்மார்
அண்ணி, மருமக்கள்
உற்றார் உறவினர்;
(2455)

---

## நினைவு கூருகின்றோம் 1992-04-15

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை / அக்கரைப்பற்று 40 ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **யோகராசா** (கோளாவில், அக்கரைப்பற்று, அம்பாறை.)

1986 ஆம் ஆண்டு திருக்கோணமலை, கும்புறுப்பிட்டிப் பகுதியில் இனங்காணாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த -

★ **உதயன்** (ஜோர்ச் யோககுமார் - சாம்பல்தீவு, திருக்கோணமலை.)

1988 ஆம் ஆண்டு பூநகரி மூக்கொம்பன் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வரச்சாவெய்திய -

**கப்டன் நிக்சன்** (யோவான் பத்திநாதன் - நறுவிலிக்குளம், மன்னார்.)

இதே சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப், சங்கர்** (செல்லையா தயாபரன் - தனங்கிளப்பு, நாவற்குழி.)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் எமது முகா

இதுவரை சான்றிதழ்கள் கிடைக்கவில்லை என புகார் செய்யப்படுகின்றது.

இந்திய வம்சாவளியினரை பதிவுசெய்யும் திணைக்களம் விண்ணப்பதாரர்கள் அனுப்பும் கடிதங்களை உதாசீனம் செய்து வருவதாக தெரிய வருகிறது.

சிலர் விண்ணப்பித்து இரண்டு வருடத்திற்கு மேலாகியும் இதுவரை இவர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் உத்தியோக பூர்வ விடயங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் இவர்கள் இருக்கின்றனர். புதிதாக காணிவாங்குபவர்கள் காணிகளை தங்கள் பெயர்களில் பதிவு செய்ய முடியவில்லை எனவும் புகார் கிடைத்துள்ளன.

திணைக்களத்தின் இந்த அசமந்த போக்கினால் இந்திய வம்சாவளியினர் படும் துயரை எடுத்துக் கூறி தொழிற்சங்கங்

# தனித்துவத்தைப் பாதுகாக்க தனி மே தின கொண்டாட்டம்

## -வாசுதேவா

இடதுசாரி இயக்கத்தின் தனித்துவத்தைப் பேணுவதற்காக நவசமசமாஜக்கட்சி மேதினத்தை எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கூட்டாகக் கொண்டாடாமல் தனியாகக் கொண்டாடும் என்று கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இனப்பிரச்சினையை ஓர் முக்கிய தேசியப் பிரச்சினையாக நோக்கும் எமது கட்சிக்கு பலதரப்பட்ட கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் கலந்து கொள்ளும் மேடையில் எமது முக்கிய பிரச்சினைகளை மக்கள் முன்வைப்பது சிரமமாக இருக்கும் எனினும் மேதினத்தின் பின்னர் எதிர்க்கட்சிகள் கூட்டாக மேற்கொள்ளும் அரசாங்க விரோத நடவடிக்கைகள் அனைத்திலும் நாமும் உற்சாகத்துடன் கலந்து கொள்வோம்.

மே தினத்திற்கும் பாதயாத்திரைக்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. அரசாங்கத்தின் மீது எதிர்ப்பை காண்பிப்பதற்காகவே பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் மே தினம் அத்தகையது அல்ல. இடதுசாரி இயக்கத்தினதும் தொழிலாளர் வகுப்பினரதும் முக்கிய தினமான மே தினம் எமது கட்சியைப் பொறுத்த அளவில் தனித்துவமானது.

## மண்டேலா-வினி பிரிவு

தென் ஆபிரிக்க கறுப்பின மக்களின் தலைவர் நெல்சன் மண்டேலா தனது மனைவியிடமிருந்து பிரிவதாகத் தெரிவித்திருக்கிறார்.

வினியுடனான தனதுமுப்பத்திநான்குவருடகாலத் திருமண வாழ்க்கை முடிவு பெறுவதாக அவர் குறிப்பிட்டார். தனக்கும், தனது மனைவிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து தாம் இருவரும் விவாதித்து இந்த முடிவுக்கு வந்ததாக மண்டேலா தெரிவித்தார்.

வினி நடத்திய போராட்டங்களின் போது, வினி இளைஞர்களால் கடத்தியதாகக் குற்றம் சாட்டப் பட்ட வழக்கில், அவர் நீதிமன்றத்தில் பொய்ச் சாட்சி சொன்னார் என்பதைத் தொடர்ந்து மண்டேலாவுக்கும், வினிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது

## கூட்ட ஒத்திவைப்பு

மாதாந்தம் போயா தினங்களில் கூடும் யாழ். ம வட்ட உலர் வலய அபிவிருத்தி மன்ற மாதாந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை ஒத்திப்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

---

பூநகரி ப. நோ. கூ. சங்கம், பூநகரி
ஜெயபுரம்-பல்லவராயன்கட்டு
பதிவு இலக்கம்: பீ ஏ.- 48, 12. 02. 1971

## அறிவித்தல்

சகல பூநகரி ப. நோ. கூ. சங்கத்தின் இடம்பெயர்ந்த பொதுச்சபை உறுப்பினர்களுக்கும், கிளைக்குழுக்களின் தலைவர் செயலாளர்களுக்கும், கூட்டுறவு மகளிர் குழு தலைவர் /செயலாளர்களுக்கும்.

### முகவரி அறிதல்

22. 10. 1991 இல் பூநகரியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த சகல பொதுச்சபை உறுப்பினர்களும், கிளைக் குழுத்தலைவர் / செயலாளர்களும், கூட்டுறவு மகளிர் குழுத் தலைவர்/ செயலாளர்களும் தங்களின் தற்போதைய தபால் சேரும் முகவரியினை அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பூநகரி ப.நோ.கூ. சங்கம்,
ஜெய்புரம்,
பல்லவராயன்கட்டு.

கூட்டுறவு சேவையிலுள்ள,
ந. பாலசுப்பிரமணியம்,
செயலாளர்.

(இ-4262)

---

# காணவில்லை

## விஜயமலர் ( மலர் )

9 - 4 - 92 வியாழக்கிழமையில் இருந்து 9 வயதுடைய, மலர் என்று அழைக்கப்படும் விஜயமலர் என்ற பிள்ளையை கடந்த இரண்டு நாட்களாகக் காணவில்லை. கடந்த ஒருவருடமாக எங்களுடன் வாழ்ந்து வந்த இவர் சிவப்பு நிறம், காதில் சிவபுக் கல்லுத்தோடும், வெள்ளையில் றோஸ்கலர் பூப்போட்ட சட்டையும் அணிந்திருந்தார். இவர் கிளிநொச்சி மணியத்தின் புத்திரியாவார். யாராவது இவரைச் சந்தித்தால் தயவு செய்து, அ. சின்னக்கண்டு, பழைய பொலிஸ் ஸ்ரேஷனடி ஆனைக்கோட்டை என்ற விலாசத்திற்கு அறியத் தரவும்.

( 2469 )

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | அரக்கர் பிடியில் |
|---|---|
| 28 — 01 — 1979 | 15 — 04 — 1989 |

## சி. தம்பிராசா பிரபாகரன்

(ஜீவா)

இரு பத்து ஆண்டுகளில்
இம் மண்ணில் உன் வாழ்வு
சுருங்கியது விதி வசமோ?
சோகமது தாளாமல்
பெருகும் விழி நீரால்
பூமியே சேறாக
பெருமகனே உன் நினைவை
போற்றுகிறோம் நாம் என்றும்.

நாவலடி,
அரியாலை.

அம்மா, அப்பா,
சகோதர சகோதரிகள்.

(சி 4263)

---

குளம், மன்னார்.)

இதே சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப், சங்கர்** (செல்லையா தயாபரன் - தனங்கிளப்பு, நாவற்குழி.)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் எமது முகாமொன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**றெஜி** (பாஸ்கரன் அசோக்குமார் – 10 ஆம் பிரிவு, தர்மபுரம், கிளிநொச்சி.)

1989 ஆம் ஆண்டு அம்பாறை, தங்கவேலாயுதபுரம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**குரு / சயனம்** (தர்மரட்ணம் தவேந்திரன் - விதானை வீதி, தம்பிலுவில் -2, அம்பாறை.)

**எல். பி.** (கந்தக்குட்டி சுந்தரராஜன் - விநாயகபுரம், திருக்கோயில், அம்பாறை.)

**வரதன்** (இராஜவேல் சிவானந்தமூர்த்தி - மகாவித்தியாலய முன்வீதி, தம்பிலுவில் - 2, அம்பாறை )

மணலாற்றில், சிறிலங்காப்படையினர் மீது பதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப்.குணம்** (கணேசலிங்கம் ஜெயநாதன் - கிண்ணியா, திருக்கோணமலை )

**2-ம் லெப் கரன்** (வேலாயுதம் சசிகரன் - சாம்பல் தீவு, திருக்கோணமலை.)

யாழ். ஒட்டுமடம் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான -

**ஜீவா** (தம்பிராசா பிரபாகரன்- நாவலடி, அரியாலை, யாழ்ப்பாணம்.)

1991 ஆம் ஆண்டு மன்னார், அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய -

**ஸ்ரீபன் / தீபன்** (தம்பையா உமாசிவம்-நெற்புலவு, பூநகரி, மன்னார்.)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட சோனகதெருவைச் சேர்ந்த மாணவன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் யோகராசா, உதயன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி/4261)

### சிந்தனைக்கு

அன்றாட வாழ்வில் நம் கண் முன் இடபபதை அறிவதே, சிறந்த அறிவு.

— ஜான் மில்டன்

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 15-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த பெ என் 61

# அன்று தமிழர் கூறியதை சிங்களவர் கேட்கவில்லை

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம் பொலவை அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்ய சிறிலங்கா இரகசியப் பொலிஸார் தயாராக இருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, திரு. உடுகம் பொலவின் அறிக்கைகளைப் பிரசுரித்த பத்திரிகைகள் மீது அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அரசாங்கம் வழக்குத் தொடர்ந்துள்ள அதேவேளை, இனிமேலும் பல வழக்குகளைத் தொடர்வதற்கு நடவடிக்கைகளையும், இவ் வழக்குகள் விவகாரத்தைக் கவனிக்கவென ஓர் உயர் அதிகாரியையும் அரசு நியமித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஆட்சி 1977 இல் இருந்து பெரும்பாலும் - சில மாதங்கள் தவிர - அவசரகாலச் சட்ட விதிகளின் கீழேயே நடைபெற்று வந்துள்ளது. இவ் அவசர காலச்சட்ட விதியின் கீழ், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற கொடிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் படுகொலையும் செய்யப்பட்டார்கள். இவ் அவசர காலச் சட்டத்தையும், அதற்குக்கீழ் அமுல் படுத்தப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தையும் அமுல்படுத்திய பொலிஸ் அதிகாரிகளில் திரு. உடுகம் பொல முக்கியமானவர்.

இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. சட்டத்தை அமுல்படுத்தியவர் அதே சட்டத்தினுள் சிக்கியுள்ளார். திரு. உடுகம் பொலவை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவு இட்டிருக்கும் அரசாங்கம், அவர் கைது செய்யப்படின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவரை விசாரணை செய்யினும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. இதேவேளை அவசரகாலச் சட்டவிதிகளைப் பயன்படுத்தி கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்துவிட்டு, திரு உடுகம் பொலவும், அரசாங்கமும் இணைந்து காரணம் கூறியது போன்று, திரு. உடுகம் பொல கைது செய்யப்பட்ட பின்னர் அவரைக் கொலை செய்துவிட்டு அரசாங்கம் ஏதாவது ஒரு காரணமும் கூறிவிடலாம். அவ்வாறு ஏதாவது நிகழின் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந் நிலையில், அன்று சட்டங்களைப் பயன்படுத்தி படுகொலைகளுக்கு தலைமை தாங்கியவர்,

# திரிசங்கு சொர்க்க நிலையில் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள்

விடுதலைப் புலிகளல்லாத மற்றத் தமிழ்க்குழுக்களைப் பொறுத்தவரை காலம் பெதுவாகப் போய்க்கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகள் பலவீனம் அடையத் தொடங்கலாம் என்பதும் ஆகக் குறைந்தது பாராளுமன்றத் தெரிவுக்குழுவாகினும ஏற்கப்படக்கூடிய தீர்வை முன்வைக்கலாம் என்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வருட முடிவுக்குள்ளாயினும் இந்த இரண்டும் நிறைவேறாவிடின் விடுதலைப் புலிகளல்லாத ஏனைய தமிழ்க் குழுக்கள் - ஒரு சில தவிர ஒருமித்துக் குழுவாக காலம் கடத்துவது நெருக்கடிக்குள்ளாகும். இவர்களது நெருக்கடி பின்வருவனவற்றுடன் தொடர்பு கொண்டது.

1) விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் தேசியவாதத்தை எதிரொலிக்கிறார்கள் என்று அமைச்சர் தொண்டமான் திரும்பத் திரும்ப கூறுவது இந்தக் குழுக்கள் தமது தமிழ் தேசியவாத அடையாளத்தையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற சட்டபூர்வ அந்தஸ்தையும் இழந்து வருவதனைக் குறிப்பிடுவதாக உள்ளது. அத்துடன் வடக்கு கிழக்கு நிலைமைகளில் நாளாந்த நிகழ்ச்சிகளோடு தொடர்பற்றவர்களாகவும், தமது நிலையை வடக்கு கிழக்கில் உறுதிப்படுத்த முடியாதவர்களாகவும் இவர்கள் உள்ளனர்.

2) வடக்கு, கிழக்குப் பகுதிகள் இணைந்ததான ஒரு தீர்வைப் பாராளுமன்ற தெரிவுக் குழு முன்வைக்குமா? என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலை இவர்களுக்கு உள்ளது.

3) இவர்களுடைய நிலையில் இருந்து இந்தியாவின் தற்போதைய அணுகுமுறை குறித்து எழுந்துள்ள தெளிவின்மை.

4) பொருளாதார நெருக்கடிகள்.

5) அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பாக எழுந்திருக்கின்ற சந்தேகங்கள். இவற்றினால், விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டால் எமது நிலை என்ன ஆகும்? அல்லது விடுதலைப்புலிகள் கட்டுப்படுத்தப்படாவிடின் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக நாம் அடுத்து மேற்கொள்ளக் கூடியது என்ன? அடிப்படையில் இந்த இரண்டு கேள்விகளுமே விடுதலைப் புலிகளல்லாத குழுக்களுக்குத் தோற்றியுள்ள கவலையாகும்.

முதலாவது கேள்வியைப் பொறுத்தவரையில் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. முதலாவதாக விடுதலைப் புலிகள் காலப்போக்கில் பலவீனப்படுத்தப்பட்டுவிட்டால் தென்னிலங்கையிலிருந்து வரும் அழுத்தங்களுக்கு மேலாக இவர்களை இதே மாதிரி பராமரிக்க வேண்டிய நிலை அரசுக்கு அற்றுப்போய்விடும். அத்துடன் சர்ச்சைக்குரியதான குடியேற்றம், நிர்வாக மற்றும் பாதுகாப்பு இயந்திரங்களினுள் தலையீடு போன்றவை பற்றி குரலெழுப்பக்கூடாதவர்களாக வேண்டிவந்துவிடும். அதை மீறிச் செயற்பட்டால் [illegible] வாக இவர்கள் அரசாங்கத்தால் தாக்கப்பட்டுவிடுவர்.

இதனால் இந்த மாதிரியான எண்ணம் கொண்டவர்கள் என்ன விலை கொடுத்தேனும் தாமும் தமிழ்த் தேசியவாதத்துடன் இணைந்து அடையாளம் காணப்படவேண்டும் என்றும், தமிழ் தேசியவாத இயக்கம் என்பது விட்டுக்கொடுப்பிற்கு அப்பாற்பட்டது என்றும் கருதுகின்றார்கள். வடக்கு கிழக்கு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு பின்னர் சுதந்திரமாகவும் பலம் வாய்ந்தவர்களாகவும் இருந்து அரசாங்கத்தின் கெடுதலான கொள்கைகளை எதிர்க்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகள் அல்லாதவர்களிடையே இந்த எண்ணத்தைப் பிரதிபலிப்பவர்களின் செயற்பாடுகளுக்கு இராணுவமும், புலனாய்வு அமைப்புகளும் முட்டுக்கட்டை போடுகின்றன. அரசியல் எதிர்ப்பு மற்றும் அழுத்தங்கள் ஏற்படுத்தக் கூடிய நிலையங்களை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இவர்கள் விரிவுபடுத்திவிடுவார்களோ என்று இராணுவமும் புலனாய்வுப் பிரிவும் அஞ்சுவதே இதற்கு காரணமாகும். அரச இராணுவம் மற்றும் புலனாய்வு அமைப்புகளின் எச்சரிக்கையான செயற்பாடுகள் எரிச்சலூட்டுவதாக இவர்கள் உணர்கின்றனர்.

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வழமையான நிலையையும். சிவில் நிர்வாகத்தையும் ஏற்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகளில் இந்தக் குழுக்களின் உதவி நாடப்படும் போது இந்த எண்ணம் சக்தியைப் பெற்றுக்கொள்ளக் கூடும்.

விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தப்படலாம் என்றாகிய பின்னர் ஏனைய தமிழ்க்குழுக்களின் அந்தஸ்துப் பற்றிய தனது கேள்வி முதலாவது கேள்வியை விட பெருமளவில் வித்தியாசமானதாகும். இராணுவ, பொருளாதார, அரசியல் கட்டுமானங்களை கட்டியெழுப்புவது பயனற்றது எனக் கருதும் இத்தகைய எண்ணத்தின் மூலவர்கள் இந்தியாவின் இராஜதந்திர அழுத்தங்களைப் பயன்படுத்தி மாகாண சுயாட்சியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகின்றனர். ஜனநாயக - அரசியல் சக்தியாக நிலைப்பது மட்டுமே இதற்குப் போதுமானதென அவர்கள் கருதுகின்றனர்.

ஆயுதங்கள் வைத்திருப்பது என்பது நவீன அரசியல் போராட்டத்தில் தேவைக்கு மதிகமான அம்சமாக வளர்ந்துள்ளது. வடக்குகிழக்குப் பகுதியில் ஒரு ஜனநாயக சூழ்நிலை நிலவினால் மட்டுமே தமிழர் உரிமைகளுக்கு இந்தியா கூட்டு உத்தரவாதம் தர முடியும்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் அல்லாத குழுக்கள் அரசியல் ஜனநாயகத்துடனும் இந்தியாவில் பெருமளவு தங்கி நிற்றலையும் தமது எண்ணமாகக் கொண்டுள்ளன. இலங்

**- தராகி -**

கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தற்போது கடைப்பிடிக்கும் கொள்கையானது இதில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது தமிழ் தீவிரவாதிகளை ஆயுத பாணிகளாக்குவது இந்தியாவில் தமிழ்த் தீவிரவாதம் வளர்வதற்கு உந்து சக்தியாகி விடும் எனக் கருதும் இந்தியா, சட்ட பூர்வமான அந்தஸ்துள்ள ஜனநாயக ரீதியான தமிழர் குழுக்களுக்கு இராஜதந்திர ரீதியில் உதவுவதன் மூலம் பெருமளவிலான மாகாண சுயாட்சி அமைப்பை பெற்றுக் கொடுப்பதே சிறந்த வழி எனக் கருதுகின்றது.

எது எப்படியாயினும் வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக் குழு எடுக்கப் போகும் இறுதி முடிவு என்ன என்பதுவே இந்தக் குழுக்களின் நெருக்கடியில் மிக முக்கியமானதாகும்.

வடக்கு-கிழக்கு இணைக்கப்படாத ஒரு இறுதித் தீர்விற்கு பாராளுமனறத் தெரிவுக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வருவார்களேயானால் விடுதலைப்புலிளல்லாத தமிழ்க் குழுக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்படுவர். ஈ.பி.டி.பி. இதில் விலக்குப் பெறக் கூடும்.

இது நடைபெறுமாயின் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு கூடுதல் பயன் பெறும்: பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபார்சுகளை இந்தக் குழுக்களே நிராகரிக்குமானால் அது ஈழப்போராட்டம் தொடரப்படுவதற்கான நியாயப்படுத்தலுக்காக விடுதலைப் புலிகளுக்கு பெருமளவில் பயன்படும். பாராளுமன்ற தெரிவுக்குழுவின் சிபார்சுகளை ஏனைய குழுக்கள் நிராகரிப்பது அல்லது விமர்சிப்பது சர்வதேச ரீதியாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கு ஆதரவை அதிகரிப்பதுடன் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடே சரியானது என்பதை தமிழ் மக்களும் வலியுறுத்தச் செய்து விடும்.

இணைப்பு இல்லாத ஒரு தீர்வைப்பற்றிய நிராகரிப்பை வெளியிட முன்னர் புலிகளல்லாத ஏனைய குழுக்கள் மிகுந்த கவனத்தோடும் விழிப்போடும் செயற்பட வேண்டியுள்ளது. வடக்குக்கும் - கிழக்கிற்கும் இடையே மணலாற்றுப் பகுதியில் பாதுகாப்பு படையினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் குடியேற்றத் திட்டங்கள் பற்றிய இவர்களின் நிலைப்பாடு என்ன? இணைப்பிற்கான இன்றைய குரலை காலப்போக்கில் நசுக்கி விடுவதற்கான ஒரு முயற்சியே வெலிஓயா இராணுவ வலயம். எனவே விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய குழுக்கள் இணைப்பைப்பற்றி பேசினால் மட்டும் போதாது சிங்களவர்களோடும் முஸ்லிம்களோடு. இணக்கமாக வாழக் கூடிய சூழ்நிலை உருவாக்க உழைக்க வேண்டும். இப்போதும் விவாதிக்கப்படுகின்ற உத்தியோக பூர்வ தீர்வுத்திட்டம் எதிலும் என்ன விட்டுக்கொடுப்பை செய்தேனும் சொந்த எதிர்காலத்தை காப்பாற்றுவார்களா?

—நன்றி ஐலன்ட்
12-04-1992

# கர்நாடகத்தமிழர்பிச்சைஎடுக்கின்றனர்; ஜெயலலிதாவின் பதில் என்ன?

-ராம்தாஸ் கேள்வி

(சென்னை)
ஜெயலலிதா தலைமையி

அதிலும் பாதுகாப்பு வலையத்திற்குள் இருக்கிற ஜெய

வரை யாரும் ஆயுதம் ஏந்தி அரசுக்கு எதிராகப் போராடவில்லை. இந்த நிலையில் தடா சட்டத்தை அரசியல் எதிரிகள் மீது பயன்படுத்துவது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

திராவிட கழகத் தோழர்கள் ராமகிருஷ்ணன், ஆறுச்சாமி திமுக முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்றவர்கள் மற்றும் பிற அமைப்புகளைச் சேர்ந்த

ஏதாவது நிகழின் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்று மில்லை. இந் நிலையில், அன்று சட்டங்களைப் பயன் படுத்தி படுகொலைகளுக்கு தலைமை தாங்கியவர், இன்று தமது உயிரைப் பாதுகாக்க அச்சட்டத்திற்கே அஞ்சுவது வேடிக்கையான தொன்றாகும்.

இதேபோன்றுதான் இன்று பத்திரிகைகளும் அரசாங்கத்திற்கு அஞ்சி நடுங்க வேண்டியுள்ளன திரு. உடுகம் பொலவில் உறுதிப்படுத்தப்பட்ட - சத்தியக் கடுதாசி மூலம் - அறிக்கையைப் பிரசுரித்த பத்திரிகைகள் மீது அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகித்துள்ளது. கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக அவசரகாலச் சட்ட விதியின் கீழும், பயங்கர வாதச் சட்டவிதிகளின் கீழும், தமிழ்ப் பிரதேசங்களில் சிறிலங்கா இராணுவம் செய்த கொடுமைகளைச் சிங்களப் பத்திரிகைகள் கவனத்திற் கொள்ளவில்லை. மாறாக படுகொலைகளுக்கு ஆதரவாகவே செய்திகளையும் வெளியிட்டு வந்தன. ஆனால், இச் சட்டங்கள் அவசர காலச் சட்டங்கள் எத்தனை வாக்குகளினால் மாதா மாதம் நிறைவேற்றப்பட்டன என்பதை மட்டுமே வெளியிட்டு வந்தன.

ஆனால், இச் சட்டங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகவும் திரும்பும் என அன்று தமிழர்களால் சுட்டிக் காட்டப்பட்ட பொழுது, பத்திரிகைகள், எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் வெறுமே கண்டுகொள்ளவில்லை. பின்னர் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பி கிளர்ச்சியின் போது தென்னிலங்கையில் இச்சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டபோது சிங்களவர்பலரும்துணுக்குற்றனர். ஆனால், ஜே. வி. பி யின் நடவடிக்கைகளால் இதனைக்கண்டனம் செய்யபெரியளவில் பத்திரிகைகள் முன் வரவில்லை.

ஆனால், இன்று பத்திரிகைகளுக்கு எதிரான ஒட்டுமொத்த நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது. இவற்றுக்கு எதிராக இன்று பத்திரிகைகளினால் எந்தளவிற்குப் போராட முடியும் என்பது சந்தேகமே. அன்று இச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டபோது, இச்சட்டங்கள் எந்தளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை பத்திரிகைகள் வெளிக் காட்டாததன் தவறு இன்று அவர்களுக்குத் தெரியவரும். அன்று தமிழருக்கு எதிரான சட்டம் என்ற பேரினவாதச் சிந்தனையால், கொழும்பில் இயற்றப்படும் சட்டம் இலங்கை பூராவும் செல்லுபடியாகும் என்பதை மறந்ததினால் நிகழ்ந்த விளைவு இது. இனி இதிலிருந்து இப்போதைக்கு மீண்டு செல்வது சற்றுச் சிரமமான காரியமே.

இதேவேளை, தமிழர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஆரம்பித்து இன்று பேரினவாத பத்திரிகைகளின் அரச அதிகாரிகள் வரையும் விரிவுபடுத்தப்பட்டுள்ள அவசர காலச்சட்டத்தின் சீரான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் மீது திருப்பினும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

---

(சென்னை)

ஜெயலலிதா தலைமையிலான அ. தி மு. க. அரசில் லஞ்ச ஊழல் தலைவிரித்தாடுகிறது. இந்தப்புகாரில் உண்மையில்லையென அ. தி மு. க. மந்திரிகள் நிரூபித்தால் தான் தனது கட்சித் தலைமைப் பதவியிலிருந்தேவிலகத்தயார்என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது கும்பகோணம் மகாமக திருவிழாவில் கூட்ட நெரிசலில் சிக்கி48 பேர் இறந்ததாகஅரசு அறிவித்துள்ளது. ஆனால் அங்கு சாவு எண்ணிக்கை 500 இருக்கும் மதசார்பு அற்ற அரசு என்று சொல்கிற ஜெயலலிதா 50 லட்சம் பேர் கூடுகின்ற விழாவுக்கு செலகிறார் அதிலும் பாதுகாப்பு வலையத்திற்குள் இருக்கிற ஜெயலலிதா அங்கு சென்றிருக்கக் கூடாது.

இதன் மூலம் இந்துமத வெறியர் என்பதை நிரூபித்து இருக்கிறார் மகாமக விழாவில் நடந்த துயர சம்பவங்களுக்கு முழுப்பொறுப்பும் ஜெயலலிதாவையும் அவர் வகிக்கின்ற பொலிஸ்துறையையும் ஐ ஜி. தேவாரத்தையும் சாரும்.

மகாமக குளத்தில் ஜெயலலிதா நீராட தனிகுளியல் அறை, தனிமேடை, மகாமக விழாவை குடும்ப விழாவாக- ஜெயாமகமாகமாற்றியுள்ளார் ஒரு வாரத்திற்கு முன்பு அந்த குளத்தில் பன்றிகள் மேய்ந்தன பாவத்தைப் போக்க மூடை கட்டிய பாவத்துடன் மகாமகம் சென்ற ஜெயலலிதா புதிய பாவத்தைத் தேடியுள்ளார்.

குடந்தை நரகத்தை மயான பூமியாக்கி விட்டனர். இதிலும் ஜெயலலிதா ஒரு புரட்சி வரலாறு படைத்து இருக்கிறார்.

பிரதமர் கூட்டிய காவிரி படுகை சம்பந்தப்பட்ட முதல்வர்கள் கூட்டத்தில் குறைந்த பட்சமாக கர்நாடகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவது பற்றிகூட மனிதாபிமான அடிப்படையில் பேசப்படவில்லை. தீர்வு காணப்படவில்லை. தமிழக மக்களுக்கு சரியான பட்டை நாமம் போட மத்திய அரசு தயார் நிலையில் இருக்கிறது.

தமிழக மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஜெயலலிதா என்ன பதில் கூறப்போகிறார்? கர்நாடகத்தில் பாதிக்கப்பட்டு திரும்பிய தமிழர்களுக்கு நிவாரணத் தொகை மத்திய அரசிடம் பெற்றுத்தர முன் வராத நிலையில அவர்களுக்கு என்ன செய்யப்போகிறார்?

கர்நாடகத்திலிருந்து விரட்டப்பட்ட தமிழர்கள் இங்கு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார் ஜெயலலிதா?

காவிரி பிரச்சினையில் தமிழக - மத்திய அமைச்சர்கள் வாய் திறக்காமல் இருக்கிறார்கள். அருணாசலம், சிதம்பரம், ரங்கராஜன் ஆகியோர் இராஜினாமாச் செய்ய வேண்டும். இது தமிழகமக்களின் விருப்பமாக இருக்கின்றது.

தமிழகத்தைப் பொறுத்த சா சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்றவர்கள் மற்றும் பிற அமைப்புகளைச் சேர்ந்த அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்ட ஈழப் போராளிக்குழுக்களைச்சேர்ந்த அனைவரையும் விடுதலை செய்து அவர்களை நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் ராமதாஸ் தெரிவித்தார்;

## -ராம்தாஸ் கேள்வி

---

ராஜீவ் கொலை வழக்கு

# செஙகல்பட்டுச் சிறைக்குள் விசேட நீதிமன்றம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையை நடாத்துவதற்கு விசேட நீதிமன்றம் ஒன்றினை நிறுவுவதற்கான புதிய இடமொன்றினை ராஜீவ் கொலைபற்றி விசாரணை செய்துவரும் கோஷ்டி தேடுகிறது.

சென்னை ஹைகோர்ட்டில் நிறுவப்பட்டிருக்கும் விசேட நீதிமன்றத்தின பந்தோபஸ்துற்பாடு பற்றிய இக் கோஷ்டி திருப்தியடையவில்லை. தினமும் சந்தேக நபர்களை செங்கல்பட்டு சிறையிலிருந்து சென்னை ஹைகோர்ட்டுக்கு கொண்டு வருவது மிகவும் ஆபத்தான ஏற்பாடு என்றும் சந்தேக நபர்களைக் கொண்டு வரும்போது அவர்களை ஒழிப்பதற்கோ அல்லது மீட்பதற்கோ ஏதேனும் சகதிகள் தாக்குதலை மேற்கொள்ளலாமென்றும் இவர்கள் அஞ்சுகின்றார்கள்.

இந்திய உள்நாட்டு அமைச்சுடன் அதிகாரிகள் பலமுறை இது பற்றிப் பேசியிருக்கிறார்கள். செங்கல்பட்டுச் சிறைக்கும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நல்ல பந்தோபஸ்துஏற்பாடுகளுள்ள செங்கல்பட்டுச் சிறைச்சாலைக்குள்ளேயே விசேட நீதிமன்றத்தை நிறுவத் தற்காலிகமாக முடிவு செய்துள்ளனர் என்று சென்னை அறிக்கைகள் கூறுகின்றன. அடுத்த மாதத்தில் குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்.

இதே வேளை இரவு நேரத்தில் சனக்கூட்டம் தெருவில் காணப்படா வண்ணம் சென்னையிலும் மற்றும் நகரங்களிலும் இரவு நேரப்படக் காட்சிகளை ரத்துச் செய்வது பற்றியும் தமிழ் நாடு அரசு சிந்தித்து வருகிறது.

---

# காங்கிரஸ் கமிட்டியிலிருந்து பங்காரப்பா இராஜினாமா

(பெங்களூர்)

கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

பெங்களூரில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் திருப்பதியில் தொடங்கியுள்ள கட்சியின் முழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

கட்சியின் அதிருப்தியாளர்கள்சிலர் ஏ.ஐ சி சி.யில் சேர்க்கப்பட்டது குறித்து பங்காரப்பாவின் ஆதரவாளர்களிடையே அதிருப்தி நிலவியதை அடுத்துபங்காரப்பாஇராஜினாமாச் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

---

# கடலில் மூழ்கி மூவர் மரணம்

(சென்னை)

ராமேஸ்தனுஷ் கோடியில் கடலில் குளிக்கச் சென்ற மூன்று பேர் கடலில் மூழ்கி இறந்துள்ளனர்.

புது வருட தினத்தை முன்னிட்டு. கடலில் குளிக்கச் சென்றவர்களே இவ்வாறு மரணமானவர்கள். ஊழியர்கள் இருவரும், கடற்படை அதிகாரி ஒருவருமே இவ்வாறு மரணமானவர்கள் ஆவர்.

---

# யெல்சின் தோல்வி அடைந்தால் அமெ. உதவி நிறுத்தப்படலாம்

## - வாஷிங்டன் எச்சரிக்கை

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினின் சீர் திருத்த அரசு கவிழ்ந்து விட்டால், ரஷ்யாவிற்கான அமெரிக்க உதவி நிறுத்தப்படலாம் என்று வாஷிங்டன் எச்சரித்துள்ளது.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரோவ ரோவ் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்

பொரிஸ் யெல்சினின், தொலை நோக்கு பொருளாதார சீர்திருத்தங்களை அமுல் செய்வதாக உறுதியளிக்கப்படாவிட்டால் 2400 கோடி டொலர்மதிப்புள்ள அமெரிக்க உதவி வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரஷ்ய அரசின் புரட்சிகரமான பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ரஷ்ய பாராளுமன்றம் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து ரஷ்ய அமைச்சரவை இராஜினாமாச் செய்ய முடிவு எடுத்திருந்தது.

ஈழநாதம்

# அமெ தவிரவேறொருவல்லரசு உருவாக இடமளிக்கக் கூடாது

## - பென்ரகன் அறிக்கை

(வாஷிங்டன்)

ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த வேறொரு வல்லரசு மேற்கு ஐரோப்பாவிலோ, ஆசியா விலோ, முன்னாள் சோவியத் யூனியனிலோ உருவாகுவதற்கு அமெரிக்கா இடமளிக்கக் கூடாது என்று உலகின் புதிய ஒழுங்குபற்றி பென்ரகன்வகுத் துள்ள திட்டமொன்றில் கூறப் பட்டுள்ளது.

"பென்ரகனின் புதிய உலக ஒழுங்கில் அமெரிக்கா ஏக வல்லரசு'' என்ற தலைப்பில் இன்டர் நேஷனல் ஹரோபிட் றிபியூன் இதழின் மார்ச் 9 ஆம் திகதியவெளியீட்டில் கட்டுரை யொன்றை பிரசுரித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பு வட் டாரங்களை ஆதாரம் காட்டி வெளியிடப்பட்ட இக்கட்டுரை யில் மேலும் பொதுத்திட்டங் களின் அடிப்படையில் மட்டும் கூட்டுச் செயற்பாடு பற்றியும் ஆலோசனை தெரிவிக்கப்பட் டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

### லிபியாவுக்கெதிரான

# தடைகளை ஒத்திவைக்க அரபுலீக் கோரிக்கை

லிபியாவுக்கு எதிராக விதிக் கப்பட்டுள்ள அனைத்துத் தடைகளையும் ஒத்திவைக்க வேண்டும் என அரபுலீக் நாடு கள் ஐக்கிய நாடுகள் பாது காப்பு சபையிடம் வேண்டு கோள் விடுத்துள்ளன.

இராணுவ, விமானப் போ க்குவரத்து தடைகள் இன்றி லிருந்து அமுலுக்கு வரவுள் ளதாக ஐ. நா. பாதுகாப்பு சபையினால் அறிவிக்கப்பட் டுள்ள இவ்வேளையில் இந்த வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையே லிபியா ஏனைய நாடுகளுடனான தகவல்தொடர்புகளை துண்டி த்துக் கொண்டுவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை

# பிரிவுபசார விழாவில் ஏனைய மாவட்ட ஆயர்கள்

மே மாதம் 11 ஆம் திகதி யாழ் ஆயர் திரு. வ. தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆயர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு நடை பெறும்விழாவில்ஏனையமறை மாவட்டங்களில் இருந்தும் ஆயர்கள்வருகை தரவுள்ளனர்

கொழும்பு மாவட்ட பேரா யர் மக்காஸ் நிக்லஸ் பெர் ணண்டோ மன்னார் மாவட்ட ஆயர் மற்றும் திருக்கோண மலை-மட்டக்களப்பு மாவட்ட பேராயர் ஆகியோர் இவ் விழா வில் கலந்து கொள்வது குறிப் பிடத் தக்கது. (75)

## பயணக் கட்டணம் குறைப்பு

அன்னை பூபதியின் நினைவு தினத்தையொட்டி 750 இல க்கப் பாதைக்கான யாழ் - பருத்தித்துறை பஸ் கட்டணத் தில் குறைப்புச் செய்துள்ள தாக வடமராட்சி பேருந்து இயக்குநர் சங்கம் அறிவித்துள் ளது.

முன்னைய கட்டணத்திலும் பார்க்க ஐந்து ரூபா குறைக் கப்பட்டுள்ளது.

முன்பு ஒருவழிப் பயணத் திற்கு ஒருபத்தைந்து ரூபா

## குடிநீர்த் தட்டுப்பாடு

அம்பாறை மாவட்டத்தில் நிலவி வரும் வரட்சியால் குடி நீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

அத்துடன் வரட்சியினால் சுற்றாடலும் மாசுபட்டுள்ள தனால் தொற்று நோய்கள் பரவும் அபாயமும்,

காட்டு மிருகங்கள் குடி நீர் தேடிக் கொண்டு கூட்டம் கூட்டமாக கிராமப் புறங்க ளுக்குள் நுழைய ஆரம்பித் துள்ளன என்றும்,

குறிப்பாக யானைக் கூட் டங்கள் நுழைவதனால் கிராம வாசிகளின் தென்னை மரங் கள், குடிசைகள் நாசமாகின் றன என்றும் தெரிவிக்கப்படு கிறது.

# மினிபஸ் விபத்தில் பியகமையில் 10பேர் பலி

(கொழும்பு)

பியகமையில் இடம் பெற்ற மினிபஸ் விபத்தொன்றில் பத்துபேர் வரை உயிரிழந்துள் ளனர் என பியகமை பொலி சார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்று கிழமை பேருவளைக்கு திருமண வீடொன்றுக்கு ஆட்களை ஏற் றிக் கொண்டு சென்ற இந்த மினிபஸ் இன்னொரு வாகனத் துடன் மோதியதால் இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டது என்றும்;

இந்த விபத்தில் மேலும் இருபது பேர்வரை காயம டைந்துள்ளனர் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

## நீர்ப்பாசன ஊழியர்

## வீடு இடிந்து வீழ்ந்து இரு பெண்கள் காயம்

(கொழும்புத்துறை)

எறிகணைத தாக்குதலால் சேதமடைந்திருந்த வீடொன் றின் சுவர் இடிந்து விழுந்த மையால் இருவர் காயமடை ந்து யாழ். போதனா வைத் திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கொழும்புத்துறை கிழக் கைச் சேர்ந்த ஆ. கனகசபாபதி என்பவரின் வீடு கடந்த திங் களன்று இடிந்து வீழ்ந்த போதே வீட்டில் இருந்த தாயும், மகளுமான இரு பெண் கள் காயமடைந்தனர்.

சேதமடைந்திருந்த இந்த வீடு கூரை உட்பட முழுவது மாக இடிந்து விழுந்து விட்ட தாக தெரிவிக்கப்படுகிறது.

# திருப்பதிகாங்கிரஸ்மாநாட்டில் புலிகளை தடைசெய்ய கோரிக்கை

(திருப்பதி)

தேசிய முக்கியத்துவம் வாய் ந்த பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில்அனை த்து அரசியல் கட்சிகளும் மக் களால் தெரிவு செய்யப்பட்ட பஞ்சாப் அரசுக்கு ஒத்துழை ப்பு வழங்குமாறு திருப்பதியில் நடைபெறும் இந்திரா காங் கிரஸ் கட்சி மாநாட்டின் நகல் அரசியல்தீர்மானம் கூறுகிறது.

நேற்றுப் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்ட நகல் அரசியல் அறிக்கையில், ஜம்மு-காஷ்மீ ரில் மீளவும் மக்கள் ஆட்சியை அமைக்க பிரதம மந்திரி நட வடிக்கையை மேற்கொள்ள உள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகிறது. தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம் பிப்பதன்மூலம்பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் மீளவும் சகஜ நிலையை ஏற்படுத்தலாம் என் றும் அந்த அறிக்கை கூறு கிறது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதையும் நகல் தீர் மானம் கண்டிக்கிறது

கடல் கடந்து வரும் ஆயுதபாணிகளான விடுத லைப் புலிகள் தமிழ் நாட்டு மக்களைப் பணயக் கைதிக ளாக வைத்திருப்பதை அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்றும் அரசியல் நகல் தீர் மானம் தெரிவிக்கிறது.

இதேவேளைவிடுதலைப்புலி களை இந்தியாவில் தடை செய்யுமாறு கோரி எஸ் எஸ். அலுவாலியா சமர்ப்பித்த நகல் தீர்மானம் ஒன்றும் திருப்பதி காங்கிரஸ் மாநாட் டில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது ராஜீவ் காந்தியைக் கொலை செய்த வர்களுக்கு எதிராக நடவடி க்கை எடுக்குமாறும், அவர் கள் வெளிநாடுகளில் வாழ் க்கைநடத்தினால் அவர்களை வெளியேற்றவும் அத்தீர்மா னம் கோருகிறது.

இதேவேளை நேற்றைய தினம் மாநாட்டில் அரசியல் நகல் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# அமெரிக்கா - இந்தியா கூட்டு கப்பற்படை ஒத்திகை

## - சரத்பவார்

(டில்லி)

அமெரிக்காவும் இந்தி யாவும் இணைந்து கூட்டாக இந்து சமுத்திரத்தில் கடற் படை ஒத்திகை நடத்துமென இந்திய பாதுகாப்பு அமைச் சர் சரத்பவார் அறிவித்தி ருக்கிறார். அமெரிக்க-இந்திய கடற்படையின் கூட்டு நட வடிக்கை செப்ரெம்பர் மாத இறுதியில் நடைபெறும் என்றார் சரத்பவார்

இதன் மூலம் அமெரிக்க-இந் திய இராணுவ ஒத்துழைப்புக் குத்தான் பலமாக அடித்தளம் இட்டிருப்பதாக சரத்பவார் குறிப்பிட்டார்.

இதேவேளை அமெரிக்க - இந்தியகடற்படைகள் இணைந்து இந்து சமுத்திரக் கடற் பிராந்தியத்தில் ஒத் திகை நடத்த இந்திய அரசு முடிவெடுத்திருப்பதை இந்தி யக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் இந்திர ஜித்குப்தா கண்டித்துள்ளார்.

# அம்பாறை அகதிகளுக்கு யானைகளால் தொல்லை

(அம்பாறை)

அம்பாறையில் காட்டுப்பகு களில் குடிசை அமைத்திருக் கும் தமிழ் மக்கள் யானைக ளாலும் பெரும் தொல்லைக ளுக்கு உள்ளாக்கப்படுகின்ற னர்.

இராணுவ கெடுபிடிகளால் காடுகளில் குடிசையமைத்து வாழ்ந்துவரும் இவர்களின் குடிசைகளை யானைகள் அழித்து அட்டகாசம் செய் கின்றன.

அப்பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாக யானை கள்மக்கள் வாழும்குடிமனைப் பகுதிகளிலும் அட்டகாசம் செய்து வருவதாகவும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

# லொறிகளை மீட்பதில் மேலும் காலதாமதம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் சிக்கியுள்ள லொறிகளை மீட்பதில் மேலும் காலதாமதம் ஏற்பட் டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மேற்படி பகுதியில் கடந்த பல மாதங்க ளாக இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள ஐம்பதிற்கு மேற் பட்ட லொறிகளை வழங்குவ தற்கு கூட்டுப்படைத் தலை மையகம் விரிவான அறிக்கை ஒன்றை அனுப்பிவைப்பதாக யாழ். அரச அதிபரிடம் கூறி மட்டுமே மீளப்பெறக் கூடிய தாக இருக்கும் எனவும் சில பயன்படுத்த முடியாத அள விற்கு சேதமாகியிருப்பதாக வும் இன்னும் சில, இராணுவம் தமது தேவைக்கு பயன்படுத் துவதாகவும் தெரியவருகிறது


## பரிசளிப்புவிழா

தமிழீழ ஆய்வு நிறுவனத்தி னால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டி யில் பிரிவு மட்டங்களிலும், மாவட்ட மட்டத்திலும் வெற்றி பெற்றவர்களுக்கான

# செய்தி சரியானதே

எமது தினசரியில் ''கல்வி அதிகாரி நியமனம், மீளப் பரி சீலிக்கக் கோரிக்கை'' என்ற தலைப்பில் 22-03-92 இல் வெளி யான செய்தி குறித்துத் திரு. எஸ் சி எஸ். சிதம்பரநாதன் எழுதிய கடிதம் சார்பாகத் தெரிவிப்பது வருமாறு:

யாழ் மாவட்டத்தில் வளர்ந்தோர் கல்வி அதிகாரியின் கடமைகளைக் கவனிக்கும் பொறுப்பிற்கு மத்திய கல்வி அமை ச்சு எஸ்.சி.எஸ். சிதம்பரநாதனை நியமித்துள்ளது 1-12-91இல் இருந்து செயற்படும்படியாக வழங்கப்பட்ட இந்தநியமனத்தை யாழ். கல்விப் பணிப்பாளர் கொழும்புக்குப் போகுமுன் வழங் கிய தமது பணிப்புரையில் 1990 இல் இருந்து செயற்படும்படி யாக வழங்கியுள்ளார் என்பது எமது செய்தியின் பிரதான பகுதியாகும்.


My No.J/14/3/162
Dept. of Education,
Jaffna.
17.03.1992.

Mr. S.C.S. Sithamparanathan,
Non Formal Education Unit.

Performing Adult Education Officer.

Further to letter No. ... of ... 1992 issued by S.R. with copy to you.

I have to inform you that your appointment to look after the duties of A.E.O. is approved from 15.06.1988 by the Secretary, Ministry of Education & Higher Education.

R. ...
Regional Director of Education,
Jaffna.

Copies to: 1. Accountant.
2. ... Handicraft. - who is requested to ... connected with Non Formal Education.

திரு சிதம்பரநாதனுக்கு கல்வி அதிகாரி அனுப்பிய நியமனக் கடிதத்தின்பிரதி

1) மேற்படி எமது செய்தி சரியானதே.

2) பதில் முதியோர் கல்வி அதிகாரி பதவி நியமனம் தொடர் பாக 17-03-1992 திகதிய இலக்கம்: ஜே/ஜிஏ/3/162 இல் கல் விப் பணிப்பாளர் எழுதிய கடிதத்தில் அவரது பெயரும்

கப்பட்டுள்ளது.

முன்பு ஒருவழிப் பயணத்திற்கு இருபத்தைந்து ரூபா கட்டணமாக அறவிடப்பட்டு வந்தது. கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் இக்கட்டணம் இருபது ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. [36]

## வரட்சி

சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

இதே நேரம் வரட்சியால் பாதிப்புற்ற பகுதிகளில் உள்ள ஒன்றரை லட்சம் குடும்பங்களுக்கு உணவளிக்க 21,600 மெற்றிக் தொன் அரிசியும், 3240 மெற்றிக் தொன் தானியங்களும் தேவைப்படுகின்றது என்று சமூக சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

### நீர்ப்பாசன ஊழியர்

# நன்கொடைப் பணத்தைப் வாரிசுகள் பெறலாம்

(கொழும்பு)

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சடமையாற்றிய சேவைக் காலத்தில் மரணமடைந்த அரச ஊழியர்களுக்கான நன்கொடைப் பணம் அவர்களது பிள்ளைகளின் பெயரில் காலாகாலத்தில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது, தற்போது பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்கும் இத்தகையவர்கள் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து தமது பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும், இதுபற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் நீர்ப்பாசன திணைக்களத்தில் நீரியியல் பிரிவில் இயங்கும் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

# அதிபர்கள் உடன் பெறவும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட ஆசிரிய ஆளணியினர் தரவுகள் சேகரிக்கும் படிவங்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு பண்டத்தரிப்புக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. பசேசவேலு கேட்டுள்ளார்

இவ்வாறு பெறப்படும் படிவங்களைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன் நேரில் சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (ச)

# புனரமைப்பு கூட்டம்

கூட்டுறவு ஊழியர்தொழிற் சங்கப் புனரமைப்புச் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று பதினெட்டாம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ் மணிக்கூட்டு வீதியில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. க. செல்வராஜா தலைமையில் நடைபெறும். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டு இக் கலந்துரையாடலில் கருத்துரைகள் வழங்குவார்கள். (22)

ஒன்றை அனுப்பிவைப்பதாக யாழ்.அரச அதிபரிடம் கூறியுள்ளதாக தெரியவருகிறது.

இதில் ஒரு பகுதி லொறிகள்

## அன்னைபூபதி

திருமதி பார்வதி சிவபாகம் இசைக்குழுவினரின் எழுச்சிப் பாடல்களும் ''உணர்ச்சிகள் உறங்குவதில்லை'' என்ற நாடகமும், ''எங்கள் தாயகம், தமிழீழத்தாயகம்'' என்னும் தலைப்பிலான கவியரங்கமும் இடம்பெறவுள்ளன. (24)

## அன்னை

அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன், பொது சுகாதார பரிசோதகர் திரு.ந விஜயசுந்தரம் திரு த. தர்மலிங்கம் ஆகியோர் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினார்கள். (22)

## கிழக்கு

தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டமை தெரிந்ததே.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட புலிகளை அழிக்கப் போவதாக கூறிக் கொண்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட சிறிலங்கா படையினர் புலிகளின் தாக்குதல்களால் இழப்புகளுடன் தாக்குதலை தொடர முடியாத நிலையை அடைந்துள்ளனர்.

திருக்கோணமலையில்காடுகளுக்குள் நுழைய முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரும் புலிகளால் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளனர்,

## பயிற்சி

பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சரே நேரில் சமுகமளித்திருந்தார்.

ஆயினும் கடந்த முதலாம் திகதிவரை 74 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 106 பேரும் பயிற்சிக் காலத்தில் வழங்கப் பட்ட படிகள் கூட நிறுத்தப் பட்டு நிராதரவாக்கப் பட்டுள்ளனர் என மேற்படி சம்மேளன பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

யில் பிரிவு மட்டங்களிலும், மாவட்ட மட்டத்திலும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று (மாலை 7 மணிக்கு போக்குவரத்துசாலை முன்பாகவுள்ள கோண்டாவில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவின் போது வழங்கப்படவுள்ளன.

## மதுபோதையில்

வையிடக்கூடிய நிலையில் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது

தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் பிரசவத்துக்கென வந்த ஐந்து பேர் உட்பட பத்துக்கு மேற்பட்ட நோயாளிகள் இச் செய்கையினால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகினர் இதே வேளை முல்லைத்தீவில் இருந்து வந்த கர்ப்பிணிப் பெண் பிரசவித்த சிசு மரணமடைந்துள்ளது

நோயாளர்களை அழைத்து வந்த உறவினர்கள் இந்த வைத்திய அதிகாரியை தாக்க முயன்றபோது வைத்திய சாலை பாதுகாப்பு ஊழியர்கள் தடுத்து நிறுத்திவிட்டனர் இதனையடுத்து இந் நோயாளியின் உறவினர்கள் வைத்திய சாலை காவல்துறை பணிமனையில் புகார் செய்தனர்.

பல்வேறு நடவடிக்கைகளின் பின்பு ஊழியர்களால் எழுப்பி விடப்பட்ட இந்த அதிகாரி சிற்றூழியரை சிகரெட் வாங்கிவர பணித்துள்ளார். மருத்துவ அறிக்கையையும் சிற்றூழியரை எழுதுமாறு பணித்துள்ளார்.

கடமையை ஒழுங்காக செய்விப்பதற்கு பலதரப்பாலும் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்காததால் வேறொரு மருந்துவ அதிகாரி கடமைக்கு அழைக்கப்பட்டார்.

வெளி நோயாளர் பிரிவிலிருந்து வெளியேறிய இந்த அதிகாரி ஊழியர்களுக்கான அறையை தாண்டிச் செல்ல முன் பலதடைவைகள் தரையில் விழுந்ததால் பாதுகாப்பு ஊழியர்கள் இவரை தாக்கி விடவேண்டிய நிலையும் ஏற்பட்டது. (க, ச)

2) பதில் முதியோர் கல்வி அதிகாரி பதவி நியமனம் தொடர்பாக 17-03-1992 திகதிய இலக்கம்: ஜே / ஜிஏ/3/162 இல் கல்விப் பணிப்பாளர் எழுதிய கடிதத்தில் அவரது பெயரும், உத்தியோக முத்திரையும் இடப்பட்டுள்ளது.

3) எழுந்தமானமாக கல்வி அமைச்சின் செயலாளர் பதில் நியமனங்கள் வழங்குவதில்லை, சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளரின் விதந்துரையின் அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

4) யாழ். கல்விப் பணிப்பாளர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் நியமனம் வழங்கினார் என்பது எமது செய்தியில் இடம் பெறவில்லை.

5) கல்விப் பணிப்பாளர் சுயவிருப்பத்தின் பெயரில் நியமனம் வழங்கினாரா, இல்லையா என்பதைக்கல்விப்பணிப்பாளரே உறுதிப்படுத்த வேண்டும். அவருக்காக இன்னொருவர் (எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன்) அதனை உறுதிப்படுத்த முடியாது

6) உங்கள் கடிதத்தில் எஞ்சிய பகுதி போதனாசிரியர்களின் மகஜரில் அடங்கியிருப்பதால் அதற்குப் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை.

7) எதிர்காலத்தில் எம்முடன் தொடர்பு கொள்வதானால் தாபனக்கோவை அத்தியாயம் XXVIII ஷரத்துக்கள் 5:1 5:4 க்கு அமைவாகத் தொடர்புகளை மேற்கொள்வது விரும்பத்தக்கதாகும். (ஆ-ர்)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கதிர்காமு ராஜதுரை ராஜநேசன்**
**(பாப்பா)**

தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட பாப்பாவிற்கு

**எமது கண்ணீர் அஞ்சலிகள்**

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

-தகப்பன், தாய்

[2462]

# மரண அறிவித்தல்

## வெள்ளையர் வல்லிபுரம்

மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், தற்பொழுது அச்செழு நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. வெள்ளையர் வல்லிபுரம் 14-04-92 (நேற்று) காலமானார். அன்னார் திருமதி வல்லிபுரம் செல்லம்மாவின் அன்புக்கணவரும், மகேஸ்வரி, இராசமலர், நகுலேஸ் (ஓய்வு பெற்ற உதவி நில அளவை அத்தியட்சகர், நில அளவையாளர் ஓமான்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், செந்தில்தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன் (விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர், புனித சவேரியார் ஆண்கள் ம. ம. வி. மன்னார்), மதிவதனி, கீதாஞ்சலி, பிரியதர்சினி, சூரியகுமார், மாலினி, மீரா, திருமதி ஆனந்தராணி பகீரதனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15 - 04 - 92) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அச்செழு,
நீர்வேலி.

தகவல்:
செ. பகீரதன்
(பேரன்)

[4264]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.